

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற கூட்டணியின் வேட்பாளரும், அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது தேர்தல் பிரச்சாரத்தைத் திருவெறும்பூர் கூத்தைப்பார் பேரூராட்சிக்கு உட்பட்ட கூத்தைப்பார் கிராமம், ஜெயநகர், பெல் டவுன் ஷிப், பாரதிபுரம், மூவேந்தர் நகர், கணேஷ் கார்டன், சுபாஷ் நகர், வெங்கடேஸ்வர நகர், ஸ்ரீராம் அவென்யூ, அம்பிகா நகர் சி கே பி கார்டன், ஆகிய பகுதிகளில் தனது பரப்புரைப் பயணத்தை மேற்கொண்ட அவர், பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்களை வழங்கி வாக்குச் சேகரித்தார்.



கும்பகோணம் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளரும், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளருமான சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏவுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் கும்பகோணம் பகுதியில் பிரச்சாரம் செய்தனர்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. கூட்டணி கட்சியின் தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது. ராசிபுரம் பழைய பேருந்து நிலையம் அருகே தி.மு.க. தேர்தல் அலுவலகத்தை நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சரும் தொகுதி வேட்பாளருமான மா.மதிவேந்தன், தொகுதி தேர்தல் பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ.., கே.பி.ராமசாமி, தொகுதி தேர்தல் பணி குழு பொறுப்பாளர் ஏ.கே. பாலச்சந்திரன், நகர தி.மு.க. செயலாளர் என்.ஆர்.சங்கர் மற்றும் காங்கிரஸ், தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் போன்ற கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த மாவட்ட, நகர, ஒன்றிய, நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை பகுதியில் இருந்து 225 மாற்றுக் கட்சியை சார்ந்தவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர். இணைந்த அனைவருக்கும் கழக இருவண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார். உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி. எழில்மாறன், வழக்கறிஞர் பொன்.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் உடனிருந்தனர்.

### மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாகையில் நாளை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!



நாகை. ஏப். 6-

நாகை மாவட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரை செய்ய (7.04.2026) நாளை மாலை 04.00மணிக்கு நாகையில் மாவட்ட திமுக அலுவலகம் தளபதி அறிவாலயம் அருகே நடைபெறும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் தி.மு.க. மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து ஆதரித்து வாக்கு சேகரிக்க நம் திராவிட நாயகர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் வருகை தர உள்ளார்கள். இந்த தேர்தல் பொதுக்கூட்டத்தில் நாகை மாவட்ட கழகத்தினர், ஜனநாயக முற்போக்கு கூட்டணியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இது குறித்து நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன்வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

காலை உணவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் மட்டுமின்றி, உலக நாடுகளே திரும்பி பார்க்கும் அளவுக்கு அனைத்துத் தரப்பு மக்களுக்குமான பொற்கால ஆட்சியை தந்துகொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள்,இந்த சந்ததிகளுக்கு மட்டுமின்றி எதிர்கால சந்ததிகளுக்கும் சேர்த்துதொலை நோக்கு பார்வையோடு எண்ணற்ற அரிய திட்டங்களை தந்து அதனைநிறைவேற்றி வருகிறார்.

மக்களின் தேவைகளை சிந்திக்கும் ஒரு முதல்வராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வரப்போகும் 2026 சட்டமன்ற தேர்தலிலும் மக்கள் ஆட்சியை தேர்ந்தெடுக்க தயாராகிவிட்டனர்.

பொற்கால ஆட்சி 2026லும் திராவிட நாயகர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய ஆளுமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சியாக தொடர மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாகை மாவட்டம் நாகையில் நாகை மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயம் அருகே தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றுகிறார். “எல்லோருக்கும் எல்லாம்” என

ஏழைகளின் கண்ணீர் துடைத்து திமுகவுக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்லாமல் வாக்களிக்காதவர்களும் நாம் திமுகவுக்கு வாக்களிக்கவில்லையே என்று வருத்தப்படும் அளவிற்கு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பயன் அளிக்கும் திட்டங்களை தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தேர்தல் அறிக்கையில் உலக பொருளாதார வல்லுனர்களை திரும்பிப் பார்க்க வைத்த இல்லத்தரசிகள் தங்களுக்கு தேவையான பொருட்களை தாங்கள் பகுதியிலே தாங்கள் விரும்பிய பொருட்களை வாங்கிக் கொள்ள ரூ.8,000 த்திற்கான கூப்பன் திட்டம், மகளிர் உரிமைத்தொகை ரூ. 2,000 ஆக உயர்த்திடுவது மற்றும் மீட்டர் இல்லா மின்சாரம், நெல்கொள்முதல் விலை உயர்வு உள்ளிட்ட

விவசாயிகளின் உள்ளம் மகிழ்வித்து, திட்டம்” எட்டாம் வகுப்புவரை காலை உணவுதந்து திட்டத்தை விரிவு படுத்தித்தந்திருக்கும் நாம் திராவிட நாயகர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேதாரணியம சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மா.மீ.புகழேந்தி, நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர எம்.எச். ஜவாஹிருல்லா, ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்திலும், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் டி.லதா விற்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திலும் வாக்கு சேகரிக்க தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வருகை தந்து உரையாற்ற உள்ளார்கள் இந்த பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிகட்சிகளை சேர்ந்த கூட்டணி கட்சிதலைவர்கள் கூட்டணி கட்சியினர் மற்றும் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு மற்றும் கிளைக் கழகம் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் இந்நாள் பிரதிநிதிகள் ,கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தமது அறிக்கையில் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் சி.கே. ராஜா கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், நடராஜபுரம், நத்தமேடு, மேல கட்டளை, மலையப்புரம், கட்டளை, ரெங்கநாதபுரம்,மேல மாயனூர், நடு மாயனூர், காமராஜ் பண்ணை, உள்விராக்கியம், வடுகப்பட்டி, அண்ணா நகர், வளையல்காரன்புதூர், ஆர்.புதுக்கோட்டை,கே.பி.குளம், மற்றும் அரவணாம்பேட்டை பகுதி மக்களிடம் உதயசூரியனுக்கு வாக்கு சேகரித்தார். பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### ஒன்றிய செயலாளர் பிரகாஷ் பங்கேற்பு

# திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞரணி ஆலோசனை கூட்டம்!

## அமைப்பாளர் வெங்கடேஷ்குமார் ஏற்பாட்டில்

திருவாரூர்,ஏப்.6-

திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணியின் சார்பில் , தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் ஒன்றிய அமைப்பாளர் கே.ஆர்.வெங்கடேஷ்குமார் ஏற்பாட்டில் மடப்புரம் பன்னீர்செல்வம் அரங்கில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் தலைமை ஏற்க , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வினோத் குமார், எம். பி.எடிசன் , ஒன்றிய துணை செயலாளர்கள் எம்.என். ராஜா, சேதுமுருகானந்தம் , கவிதா நவநீதம், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பி.பாஸ்கர், வீரமணி ,ரவிச்சந்திரன், சா.அசோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை ஏற்றனர்.

கூட்டத்தில் திருத்துறை ப் பூண்டி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் சிபிஐ கட்சியின் வேட்பாளர் கே. மாரிமுத்து அவர்களை பெருவாரியான வாக்குகள் வித்யாசத்தில் வெற்றிபெற செய்வதற்கான தேர்தல் பணிகளும், இளைஞர்களை பொய்யான மாயையிலிருந்து விடுவித்து தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கும் ,மதவாத சக்திகள் ஊடுருவாவண்ணம் பாதுகாத்திடவும் களப்பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இளைஞர் அணியில் உள்ள அனைவருக்கும் அமைப்பாளர் வெங்கடேஷ்குமார் அவர்களின் ஏற்பாட்டில் இளைஞர் அணி இலச்சினையுடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. கூட்டத்தில் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வாத்தியார் கார்த்தி, பரமேஷ், ஸ்ரீதர், வினோத், விஷ்வா,என்.கே. வெங்கடேஷ் , தகவல் தொழில்நுட்ப அணி சீனிகுமார், இளவரசன் மற்றும் வார்டு, கிளை கழக இளைஞர் அணி நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

### சேலம் மாவட்டம் – கழக முன்னோடி

# தாதம்பட்டி பி.எம்.பி. சீனிவாசன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சேலம், ஏப்.6-

சேலம் தாதம்பட்டியை சேர்ந்தவர்பி. எம். பி. சீனிவாசன் (வயது 100) நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் பி.எம்.பி. சீனிவாசன் அவர்கள் தந்தைபெரியார், மா.பொ. சிவஞானம், பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் கழகதலைவர் மு.க. ஸ்டாலின் ஆகியோரின் அன்பை பெற்றவர்.

மா.பொ.சி யுடன் தமிழ்நாடு எல்லைப் போராட்ட வீரர். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு சிறைதண்டனை பெற்றவர் அயோத்தியாபட்டனம் ஒன்றிய துணைச் செயலாளர் பொருளாளர் கூட்டுறவு சங்க தலைவராக இருந்தவர் வயது மூப்பின் காரணமாக இயற்கையெய்தினார்

அன்னாரின் உடலுக்கு மாவட்ட நிர்வாகிகள் மாநகர ஒன்றிய பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் கோட்ட நிர்வாகிகள் மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினார்கள்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் என்.ஆர். கார்த்திகேயனை ஆதரித்து ஆலந்துறை பேரூர் கழக செயலாளர் ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றிய கழக செயலாளர் சாமிபையன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், துணைச் செயலாளர் ஜெயந்தி சக்திவேல் உள்பட தேர்தல் பொறுப்பாளர், கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் டி . மதியழகன் காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றியத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் மகேந்திரன் முன்னிலையில் எருமாம்பட்டி , தளிப்பட்டி, நெடுங்கல் , பென்னேஸ்வர மடம் உள்ளிட்ட அனைத்து ஊராட்சிகளில் கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் வேட்பாளர் மதியழகன் கழக அரசின் சாதனைகளை கூறி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள் ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள். இந்நிகழ்ச்சியில் பேரூராட்சித் தலைவர் தம்பிதுரை , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விமலா மணி மற்றும் கழக நிர்வாகிகள் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .